| STC No. 255/2023 | PW:1 திரு. பீட்டர் | 06.10.2025 |
|---|---|---|

**( எதிரி ஆஜரில் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு - 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்**

**குறுக்கு விசாரணைதொடர்ச்சி** :

5. எதிரியை எனக்கு 10 ஆண்டுகளாக தெரியும். எனது நண்பர் ஸ்ரீதேவி என்பவர் மூலமாக எதிரியை எனக்கு தெரியும். எதிரி Choice India என்ற நிறுவனத்தில் வேலை செய்துவந்தார். Choice India என்ற நிறுவனம் Asset Management, Mutual Fund Company என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. மேற்படி Mutual Fund Company யில் முதலீடு செய்ய எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

6. நான் எந்த எந்த தேதியில் எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்றால் நியாபகம் இல்லை. நான் ஒரே தேதியில் மோத்தமாக எதிரிக்கு பணம் ஏதாவது கொடுத்துள்ளேனா என்றால் ரொக்கமாக கொடுத்துள்ளேன். 08.07.2022 அன்று என் வீட்டில் வைத்து அவரிடம் ரூ.17,24,500/- கொடுத்தேன். நான் வருமானம் வரி செலுத்துகிறேன் என்றால் செலுத்துகிறேன். மேற்சொன்ன ரூ.17,24,500/- யை நான் என்னுடைய 2022 ம் ஆண்டிற்காக வருமான வரி கணக்கில் காட்டியுள்ளேனா என்றால் இல்லை.

7. எனவே அது கணக்கில் வராத பணம் என்று சொன்னால் அதை விவசாயத்தில் வந்த பணம். 2023 ல் நான் வருமான வரி செலுத்தினேனா என்றால் செலுத்தினேன். அதில் இந்த பணத்தை நான் காட்டவில்லை என்றால் அது விவசாயத்தில் கிடைத்த பணம். நான் 202 ல் வருமான வரி செலுத்தியதற்கான Returns ன் நகலை நீதிமன்றத்தில தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும்.

8. எனது பெயரில் விவசாய நிலம் உள்ளதா என்றால் இல்லை. நான் குத்தகைக்கு நிலம் எடுத்துள்ளேனா என்றால் எடுத்துள்ளேன். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிரி எனக்கு எவ்வளவு பணம் தர வேண்டும் என்று எனது புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் ரூ.27,57,759/- தர வேண்டும்.

9. காசோலை ரூ. 25 லட்சத்திற்கு நிரப்பி போட்டுள்ளேன் என்றால் சரிதான். 3 காசோலைகளிலும் யார் கையொப்பம் செய்தார்கள் என்றால் திரு. எட்வின். எதிரிக்கு எதிராக SEBI யில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. 18.07.2022 அன்று எதிரி கூடலூருக்கு வரவில்லை என்றாலும் தனது குழந்தையின் பிறந்த நாளுக்காக 07.07.2022 அன்று சென்னையில் இருந்து அவரது சொந்த ஊரான நாகர்கோயிலுக்கு 08.07.2022 அன்று நாகர்கோயிலில் இருந்து சென்னைக்கும் பேருந்தில் பயணச்சீட்டு வாங்கி உள்ளார் என்று சொன்னால் சரியல்ல. **மேற்படி பயணச்சீட்டுகள் முறையே எ.த.சா.ஆ.1 மற்றும் எ.த.சா.ஆ.2 ஆகவும் குறியீடு**

**செய்யப்படுகிறது. மேற்படி பயணச்சீட்டுகள் எதிரியின் பெயரில் இருப்பதால் புகார்தாரர் தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.**

10. எதிரி Choice Equities என்ற நிறுவணத்தில் என்ன பதவியில் இருந்தார் என்றால் Regional Manager என்று அவர் சொன்னார். அதை நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எனது புகாரில் எதிரி எனன்கு ரூ.27,57,759/- தரவேண்டும் என்று சொல்லியுள்ளேன் என்றாலும் ஆனால் காசோலை ரூ.25,00,000/- தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் மீத தொகையை பற்றி எனது புகாரில் ஏதாவது சொல்லியுள்ளேனா என்றால் அந்த தொகையை ஒரு மாத்திதில் அவர் தருவதாக சொன்னதால் குறிப்பிடவில்லை.

11. நான் 2021ம் ஆண்டு எங்கு வேலை பார்த்தேன் என்று எனது அறிவிப்பில்லோ புகாரிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். 2021 முதல் ஜுன் 2022 வரை நான் எதிரிக்கு கொடுத்ததாக சொல்லும் பணத்தில் அவர் ஏதாவது திருப்பி அளித்துள்ளாரா என்றால் ரூ.4,42,242/- ரூபாய் திருப்பி கொடுத்துள்ளார், தேதி சரியாக நியாபகம் இல்லை. அதற்கான கணக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

12. இந்த பணம் விவகாரம் தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் எதிரியை கடைசியாக எப்போது சந்தித்தேன் என்றால் 05.01.2023 அன்று சென்னையில் சந்தித்தேன். எதிரி Mutual Fund Brocker என்று சொன்னால் அந்த விவரம் எனக்கு தெரியாது. நான் Mutual fund-ல் முதலீடு செய்த தொகைக்கு செக்யூரிட்டிக்காக எதிரி 3 காசோலைகள் என்னிடம் கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் Mutual fund ல் முதலீடு செய்யவில்லை. அவ்வாறு செய்திருந்தால் கம்பணி தான் காசோலை கொடுத்திருப்பார்கள் தனிநபர் அல்ல.

13. எதிரி எனக்கு பணம் தரவேண்டியிருந்தால் 1 காசோலை தான் கொடுத்திருப்பார் என்றாலும் 3 காசோலை கொடுக்க அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 1 காசோலையில் இவ்வளவு பெரிய தொகை எடுக்க முடியாது என்றும் அதனால் 3 காசோலை கொடுப்பதாக எதிரி என்னிடம் சொன்னார். நான் விவசாயம் செய்யவில்லை என்று சொன்னாலும் நான் எதிரிக்கு கடன் கொடுக்கவில்லை என்று சொன்னாலும் அதனால் வருமான வரி கணக்கில் அந்த தொகையை காண்பிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

14. அவ்வளவு பெரிய தொகையை கொடுப்பதற்கு எனக்கு வருமானம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அவ்வளவு பெரிய தொகையை நான் எதிரிக்கு கொடுத்திருந்தால் வங்கி கணக்கில் செலுத்தியிருப்பேன் என்று சொன்னால் எதிரி ரொக்கமாக தான் கேட்டார். எதிரி எனக்கு எந்த வித பணமும் தரவேண்டியது

இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி என்னிடம் கொடுத்த நிரப்பப்படாத காசோலைகளை நான் தவறாக பயன்படுத்தி நிரப்பி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னாலும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல..

Taken down by me in open Court read over / interpreted to the witness and same has been admitted by the witness to be correct.

Sd/- G.SARAVANAKUMAR, B.A., B.L., (HON'S)
**PRINCIPAL DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, GUDALUR.**